# வரலாற்றுநோக்கில் மணிமேகலைக் காப்பியம்–4. வாசித்தலும் பகிர்தலும் சாத்தனார் மரபை முன்வைத்து

# Varalatru Nokil Manimegalai Kapiyam-4 Vasithalum Pakirthalum Sathanar Marabai Munvaithu

*முனைவர் மு. ரமேஷ்*
உதவிப் பேராசிரியர்
அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி
நந்தனம் சென்னை

**Dr. M. Ramesh**
*Assistant Professor*
*Government Men's Arts College*
*Nandanam, Chennai*

**ஆய்வுச் சுருக்கம்**

*சாத்தனாரின் மணிமேகலை துறவு என்னும் இம்மாக்காப்பியத்திற்கு தமிழ் நிலமொழி நெறி வாய்ந்த சங்கத்தாரின் மேற்கணக்குமரபு முன்னதாகவும் கீழ்க்கணக்கு மரபு பிந்தியதாகவும் தொடர்வது குறித்து முந்தைய பகுதிகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேற்கே கிரேக்கம் தொடங்கி கிழக்கே சாவகம் இந்தோனேஷியா வரை புத்தத்தின் அறப்பாய்வு தடங்களை உட்கிடையாகக் கொண்டுள்ளது என்பதுவும் பாக்ட்ரிய, கிரேக்க, மவுரிய, குஷாண அரசமரபு தொடங்கி நாக, சோழ, தொண்டையர் மரபின் ஊடாக புண்ணியராச அரசமரபாக விரிவடைவது என்பதுவும் முந்தைய பகுதிகளில் சுருக்கமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவைகுறித்து மேலும் தேவைப்படும் இடங்களில் விளக்கப்பெறும்.*

*மாசாத்தன் என்றும் அழைக்கப்பெறுகிற புத்தபகவனின் அறநெறிகளை தம்ம சாத்திரத்தை) மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தன் தமிழ் மொழிப்பரப்பில் மணிமேகலை என்னும் கதைவெளி விரிக்க பலவற்றானும் மரபு தொடர்ச்சி உண்டு. இவைகுறித்து சிலவற்றையாவது விளக்க முயற்சிக்கிறது இக்கட்டுரை.*

***முக்கியச் சொற்கள்:***

*காப்பியம், மணிமேகலை, சீத்தலைசாத்தனார், துறவு, கூலவணிகன், சங்கப்பாடல்கள்*

**Abstract**

*It has been pointed out in the previous sections that the supernatural tradition of the Tamil linguistic society precedes and follows the subscript tradition of the Satanic Manimegalai monastery. It has been briefly pointed out in the earlier sections that Buddhism has intertwined traces from Greece in the west to Indonesia in the east and extends from the Bactrian Greek Mauryan to the Kushan dynasty into the Naga Chola dynasty. These will be explained where needed. This article tries to explain some of the traditions of Manimegalai in the Tamil translation of Seethalaichathan, a Madurai merchant.*

***Keywords:***

*Kapiyam, Manimegalai, Seethalai sathanar, Thuravu, Koolavanigan, Sangappadalgal*

**Citation**

Ramesh, M. “Varalatru Nokil Manimegalai Kapiyam-4 Vasithalum Pakirthalum Sathanar Marabai Munvaithu.” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 84–95.

*கி.மு.ஐந்தாம் நூற்றாண்டுமுதல் கி.பி.ஐந்தாம்நூற்றாண்டுவரை புத்தம் தனிப்பெரும் தத்துவமாக நிறுவனத் தன்மை அடைந்திருந்தது. இதன் உச்சம் தனிப்பெரும் வேந்தன் அசோகன் ஆட்சிக் காலமான கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் கனிஷ்கனின் ஆட்சிக் காலமான கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை உள்ள சுமார் ஐந்நூறு ஆண்டு காலத்தை குறிப்பிடமுடியும். அசோகனுக்கும் கனிஷ்கனுக்கும் இடையில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் வடமேற்கு இந்தியத் துணைக் கண்டத்தை உள்ளடக்கி மேற்குலக நிலப்பரப்பையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த கிரேக்கவழி அரசனான மிலிந்தா தனது அரசை புத்த அரசாகவே நடத்தியதை சொல்லமுடியும்.*

*வணிகச் சாத்துக்களின் பேராதரவை ஒருங்கிணைத்து வலுவானதொரு பொருளாதார கட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டதனால் இப்பெருவேந்தர்களால் அறவழிப்பட்ட சிறப்பானதோர் ஆட்சியை நடத்தமுடிந்தது. வணிகம் என்பது வெறும் பொருள் விற்பனையை மட்டும் சார்ந்ததன்று பண்பாட்டு பகிர்வையும் இணைப்பையும் சாத்தியப்படுத்தக் கூடியது. வணிகர்கள் பலநேரங்களில் பலநிலப்பரப்பிற்கும் சென்று பல்வேறு மக்களுடனும் தொடர்புகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றவராதலால் வானியல், புவியியல், கணிதவியல், தருக்கவியல், உணவியல், உடலியல், மருந்தியல், இறையியல், பண்பாட்டியல், சடங்கியல் இவற்றோடு சுற்றுச்சூழலியல் உள்ளிட்ட பலதுறை அறிவை பெற்றவர்களாக இருந்தனர். இத்தகைய கல்வியை சமயநிறுவனங்களாலேயே பழங்காலத்தில் அளிக்கமுடிந்தது. புத்தமும் சமணமும் வணிகர்களோடு நெருங்கிய தொடர்பை வைத்துக் கொண்டிருந்தது என்றாலும் புத்தம் தனது வெகுமக்கள் இயக்கத்தினால் இவ்வாய்ப்பை அதாவது போதிக்கும் வாய்ப்பை மிகச் சரியாகவே பயன்படுத்திக் கொண்டது.*

*வைதீகம் உள்ளிட்ட மூடநம்பிக்கைகளுக்கு எதிரான போரில் கவுதமபுத்தர் பர்விராச கமுறையை ஏற்றது முதல் சமூகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரையும் நேரில் சந்தித்து அரச, வணிக குடும்பங்களின் ஆதரவைத் திரட்டினார். ஆங்காங்கே அவரவர் தொழில்முறைக்கேற்ப அமைப்பைக் கட்டி சங்கமாக்கி அறபோதனையோடு பிற கலைகளையும் கற்றுத் தருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தினார். பிக்கு பிக்குணிகளுக்கென்று தனிச் சங்கமும் இல்லறத்தாரான ஸிராவகர்களுக்கென்று லௌகீக சங்கமும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.சி த்தார்த்தகவுதமன்புத்தரான பிறகு ஸிராவஸ்த்தியில் தங்கியிருந்தபோது அநாதபிண்டிகர் என்னும் பெருவணிகர் புத்தரை சந்தித்து உரையாடி புத்த நெறியை ஏற்றுக் கொண்டதை ச ான்றுக்கு சொல்லமுடியும். சுவாரசியமான இந்நிகழ்வின் முக்கியத்துவம் கருதி உரையாடலின் சிறுபகுதி இங்கு தரப்படுகிறது.*

*( 1185 ) 13. அநாதபிண்டிகர் கூறினார் : உயர் வெய்திய புத்தர் உரைத்த உண்மையை நான் உணர்கிறேன் - என் முழு மனத்தையும் நான் திறந்து காட்ட விழைகிறேன். என் சொற்களைச் செவி மடுத்தப் பின் ஐயன் மீர்யான் செய்ய வேண்டுவது யாதென அறிவுறுத்துங்கள்.*

*(1186) 14. என் வாழ்க்கை வேலை மிகுந்ததாயுள்ளது - பெரும் செல்வம் அடைந்திருப்பதால் நிறையப் பொறுப்புக்களால் நான் சூழப்பட்டுள்ளேன். இருப்பினும் என் பணிகளால் நான் மகிழ்கிறேன். அப்பணிகளுக்குள் என்னை ஊக்கத்தோடு ஈடுபடுத்திக்*

*கொள்கிறேன்; என்னிடம் பல மக்கள் பணியாளராயிருந்து என் தொழிலின் வெற்றியைச் சார்ந்தவராய் உள்ளனர்.*

*(1187) 15. நான் இப்போது, தங்கள் சீடர்கள் துறவின் சுகத்தைப் போற்றுவதாகவும் உலகியல் பரபரப்பைத் துறப்பதாகவும் கேள்விப் படுகிறேன். அவர்கள் கூறுகிறார்கள். உயர் வெய்திய என் புத்தர் அவருடைய அரசாட்சியையும், வாரி சுரிமையையும் கைவிட்டு விட்டு நன்னெறிப் பாதையை ஏற்றுக் கொண்டு, இவ்வாறாக உலகனைத்துக்கும் நிர்வாணம் எய்துவதற்கு வழி இது வென்பதற்கு ஒரு மாதிரியாய்த் திகழ்கிறார்.*

*(1188) 16. எது சரியோ அதைப் புரிவதற்கும், என் உடனுறை உயிர்களுக்கு பெரு மகிழ்வளிக்கவும் என் மனம் விழைகிறது. எனவே நான் தங்களை வினவுகிறேன் - நான் சமயப் பேரின் பக்கம் எய்த, செல்வத்தை, இல்லத்தை, வணிகத்தை, தொழிலை விட்டு விட்டுத் தங்களைப் போல் இல்லறந் துறந்து விட வேண்டுமா?*

*(1189) 17. அதற்கு உயர் வெய்திய புத்தர் பதிலுரைத்தார்: ''சமய வாழ்வின் பேரின்பம் உன்னதமான எண் வழிப்பாதையில் நடக்கும் எவருக்கும் அடையத் தக்கதேயாகும். எவரொருவர் செல்வத்தின் வசப்பட்டு விடுகிறாரோ, அவர் அதனால் கெட்டுப் போவதற்குப் பதில் விட்டு விடுவது நல்லது. ஆனால் எவரொருவர் செல்வத்தின் வசப்படுவதில்லையோ, செல்வமுடையவராயிருந்து அதைச் சரியாகப் பயன்படுத்துகிறாரோ, அவர் உடனுள்ளோருக்குப் பெருஞ்சுகமாய் இருக்கிறார்.*

*(1190) 18. ''நான் உமக்கு உரைக்கிறேன்: தங்கள் வாழ்நிலையிலேயே தாங்கள் இருந்து ஊக்கத்துடன் தங்கள் தொழிலில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். வாழ்க்கையோ, அன்றி செல்வமோ, அன்றி அதிகாரமோ மனிதரை அடிமைப்படுத்துவதன்று - ஆனால் வாழ்க்கை, செல்வம், அதிகாரம் ஆகியவற் றின் வசப்பட்டு விடுதலே மனிதரை அடிமைப்படுத்தும்.*

*(1191) 19. ''ஓய்வான வாழ்வு வாழுவதற்காக உலகிலிருந்து விடுபடும் பிக்குவுக்கு ஒரு பயனுமில்லை. ஏனெனில் சுறுசுறுப்பற்ற வாழ்க்கை சலிப்பூட்டக் கூடியதாகும் - மற்றும் ஆற்றல் குறைவு வெறுக்கத்தக்க ஒன்றாகும்.*

*(1192) 20. ''ததாகதரின் தம்மம் ஒருவரைத் துறவற வாழ்விற்குச் செல்லும்படியோ, உலகைத் துறக்கும் படியோ, அவருக்குத்தேவையுள்ளது என அவர் உணர்ந்தாலன்றி வேண்டுவதில்லை; ததாகதரின் தம்மம்வேண்டுவதெல்லாம், ''தான்'' எனும் ''அகந்தையின்'' போலித் தோற்றத்திலிருந்து ஒவ்வொரு வரும் விடுபட வேண்டும் என்பதும் தம் மனத்தை அவர்கள் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டு மென்பதும், இன்ப வேட்கையைக் கைவிட வேண்டு மென்பதும், நன்னெறி வாழ்வே வாழ வேண்டும் என்பதும் தான்.*

*(1193) 21. ''மனிதர்கள் யாது செய்யினும், உலகில் அவர்கள்கைத் தொழில் புரிபவராய், வணிகராய், அரச அதிகாரிகளாய் இருப்பினும், அல்லது உலகைத் துறந்து சமய நெறியாம் ஆழ்சிந்தனைத் தியானத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொள்வதாயினும்,*

*அவர்கள் தம் முழு மனத்தையும் தம் பணியில் செலுத்துவார்களாக; அவர்கள் ஊக்கமும் ஆற்றலும் உடையவர்களாக இருப்பார்களாக - மேலும் அவர்கள் தாமரை போல் - நீரில் வளர்வதாயினும் நீரொட்டா திருப்பது போல், வாழ்வியலில் உழன்றாலும் பொறாமையோ, வெறுப்போபடியாமல், அவர்கள் உலகில் தமக்கென வாழாமல், உண்மையின் வாழ்வை வாழ்வராயின், பின் இன்பமும், அமைதியும், பேரின்பமும் அவர்கள் மனத்தில் நிலைத்திருக்கும்.''*

*(1194 ) 22. இதுவே மெய்மையின் மிகச் சிறந்த முறையாய், எளிமையாய், பேரறிவிற் பிறந்ததாய் இருப்பதைக் கண்டுணர்ந்தார் அநாத பிண்டிகர். (டாக்டர் அம்பேத்கர், எழுத்தும் பேச்சும், தமிழ் வழிநூல் தொகுதி - 22, பக் 128 = 129).*

*பெருவணிகரான பிண்டிகர் எழில்மிகுந்த தனது இடத்தை அறமாக்கி புத்த அறவோருக்கு அளித்தது போல் கோசலம் மகதம் தொடங்கி உலகெங்குமுள்ள புத்த நெறியை கேள்விப்பட்ட வணிகர்கள் தங்களிடம் இருப்பதைக் கொண்டு புத்த அறவோரை காத்தனர்.*

*இதுமுதல் வழிவழியாக கவுதம புத்தரின் மறைவிற்கு பின்னரும் புத்த சங்கங்களில் பல்துறைசார் கல்வி அளிக்கப்பட்டது. வணிகர்கள் புத்தசங்கங்களின் புரவலர்களாக விளங்கினர். பல்துறை சாத்திரங்களையும் கற்றதனால் கவுதம புத்தரும் மாசாத்தன் எனப் போற்றப்படுகிறார். சாத்திரங்கள் பல கற்ற வணிக குழுக்கள் சாத்துக்கள் என்று குறிப்பிடப்படுவதனை கல்வெட்டுகள் உள்ளிட்ட பழங்கால ஆவணங்களிலிருந்து அறியமுடிகிறது. சாத்துக்கள் என்னும் வணிகமரபில் வந்தவர் மணிமேகலை ஆசிரியர் தண்டமிழ் ஆசான் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனராவார். இவர் தமிழ்சங்கப் புலவர்களுள் ஒருவருமாவார் என்பதுவும் குறிக்கத்தகுவது. இதனை மேலும் புரிந்து கொள்ளவேண்டுமானால் சங்க இலக்கியத்தில் வரும் சாத்தன், சாத்தி என்னும் பெயருடைய புலவர்களின் குறிப்புகளையும், சங்கச் செய்யுள்களில் வரும் குறிப்புகளையும், இதன் சமகால பிராமி கல்வெட்டு குறிப்புகளையும் இணைத்துவாசிப்பதன்வழி தண்டமிழ் ஆசான் சாத்தன் மரபை அறியமுடியும். இவை மணிமேகலைக் காப்பியத்தின் காலத்தையும் தெளிவுபடுத்துவதற்கு உதவியாக இருக்கும் என்பதனாலும் இங்கு கூறப்பட்டுள்ள சாரத்திற்கான விவரங்கள் சில சுருக்கமாக விளக்கப்படுகிறது.*

*மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் தண்டமிழாசான், சாத்தனார், நன்னூல் புலவன் என்றெல்லாம் சகநண்பரும் புலவருமான சிறப்புமிகு சான்றோனுமான இளங்கோவடிகள் உரிமைசார்ந்த நட்புடன் பெருமையாக சாத்தனாரை குறிப்பிடுகின்றார். கபிலர், நக்கீரர், முடமோசியார், வெள்ளிவீதியார், கழாத்தலையார், திருவள்ளுவர் உள்ளிட்ட சிலப் புலவர்களைத்தான் பிறப் புலவர்கள் நினைவுக் கூர்ந்துள்ளனர். இவர்கள் முன்னோர் என்கிற அடிப்படையில் நினைவுக் கூறப்பட்டுள்ளனர். சாத்தனாரோ மிகச்சிறந்தத் தத்துவக்கதைச் சொல்லியாக விளங்குகிறார் என்று இளங்கோவடிகள் போற்றுகிறார். உண்மையிலேயே இரட்டைக் காப்பியங்களின் கதை சொல்லியாகவும் ஒருவகையில் சாத்தனார் திகழுகிறார் என்பதையும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றை கற்றோர் உணருவர். கடைச்சங்கப் புலவராகவும் சாத்தனார் விளங்குகின்றார். தமிழ்பௌத்த அறிவுநெறிமரபில் சாத்தன் என்கிற உயர்நெறிமரபு என்கிற ஒன்றும் உண்டு. இம்மரபின் நுட்பங்களைக் கொண்டு கதையை வடிவமைத்த சிறப்பு தண்டமிழாசானுக்குரியது.*

*சங்கத் தொகைநிலைச் செய்யுள்களிலே சாத்தன், சாத்தி பெயர்களையுடையப் புலவர்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர். சாத்தனியம் என்கிற கருத்தும் இப்பெயர்களை உடைய புலவர்களின் பாக்களில் உள்ள உயர்ந்த அறிவுநெறிமரபை குறிப்பதாக தமிழில் அமையக்கூடுவதாகும். மனிதசமுதாயத்திற்கும் அவர்களுடைய நல்வாழ்விற்கும் உரிய நெறிகளை அறிவொளிப்பாதைகளை சாத்தர்களின் பாக்கள் எடுத்துரைக்கின்றன. இம்மரபில் மிகமுக்கியமானது மணிமேகலைக் காப்பியமாகும். தமிழில் இன்று கிடைக்கின்ற இலக்கிய இலக்கணங்களின் உள்ளும் புறமும் இழையோடுவது சாத்தநெறிமரபாகும். சாத்தநெறியென்பது தொல்காலத்திலிருந்த அனைத்து சமயத் தத்துவங்களிலும் உள்ள ஞானமரபை எடுத்து மனிதவாழ்வை முன்னேற்றுவதற்குரிய கோட்பாடாக மாற்றி கையளிப்பதாகும். இக்காரணத்தினாலேயே இம்மரபு பவுத்தமாகவும் பவுத்தத்தோடு தொடர்பு கொண்டதாகவும் விளங்குகிறது. இம்மரபின் மகத்தான புலவர்களுள் ஒருவர்தான் தண்டமிழாசான் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்.*

*அரசியல், சமயம், தத்துவம், பண்பாடு, பொருளியல் உள்நாட்டு வெளிநாட்டு வாணிகம், கலை உள்ளிட்ட தமிழரின் நாகரிகவளர்ச்சியை அறியத்தருகின்ற இக்காப்பியத்தின் காலம் கருத்து இவைகுறித்து பலவகையான முரண்பாடுகளை உடைய கருத்துகளை உள்நாட்டு அயல்நாட்டு அறிஞர்களும் ஆய்வாளர்களும் முன்வைக்கின்றனர். கடைச்சங்கப் புலவர் சாத்தனார் என்கிற செய்தியைக் கூட பலர் நினைவில் வைத்துக்கொண்டு உரையாடுவதில்லை. தமிழின் மிகப்பழைய சங்க அறிவுமரபின் கடைசி கதைச் சொல்லி தண்டமிழாசான் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் என்பதை அவருடைய வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்தும் விளக்கமுடியும் என்பதனால் இப்பகுதி இங்கு அமைக்கப்பட்டுள்ளது.*

*மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனாரை மணிமேகலை, சிலப்பதிகாரம் சங்க இலக்கியத்தின்வழி அறிகிறோம்.இச்சாத்தனார் சாத்தனியம் என்கிற பேரறிவுமரபின் தொடர்ச்சியாக விளங்குகிறார் என்பதை மேலைநாட்டில் கிறித்துவ இறையியலின் ஒருபகுதியாக சாத்தனியம் குறித்தவிவாதம் நடைப்பெறுகிறது. இதனைத் துணைகொண்டும் சாத்தமரபின்தொன்மையை அறியமுடிகிறது.*

*இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய இன்னொரு செய்தியாவது கீழ்காணும் சாத்தனியவிவாதத்திற்கு அடிப்படையாக அமைவது ஏசுகிறிஸ்து பிறப்புக்கு முந்தைய நிலையைக் காட்டக் கூடிய மறைநூல் தொகுதியின் பழைய ஏற்பாடாகும்.*

**சாத்தனியம்**-Satanism

*ஆயிரக்கணக்காண்டுகளாக ஐரோப்பிய அமெரிக்க இறையியல் மற்றும் மெய்யியல் துறைசார்ந்த ஆய்வாளர்கள் சாத்தனிஸம்* (Satanism) *என்கிற கோட்பாடு குறித்த விவாதம் நிகழ்த்தப்பட்டுவருகிறது.*

*கிறித்துவநம்பிக்கையில் இறைவனுக்கு எதிரான ஆற்றலாக சாத்தான் இருப்பதிலிருந்து இதுகுறித்த விவாதம் எழுந்திருக்கிறது. இதன்காரணமாக சாத்தானின் மூலத்தை தேடும் அவர்கள் யூத, ஜொராஸ்ட்டிய, பாரசீக, புத்த, ஹிந்து சமயங்களில் நன்மை/தீமை இவ்விரண்டிற்கும் பொதுவானதாக சாத்தான் விளங்குகிறது என்பதை கண்டுரைத்துள்ளனர்.*

**சொற்பிறப்பியல்**

*"சாத்தான்" என்ற சொல் முதலில் சரியான பெயர் அல்ல, மாறாக "எதிரி" என்று பொருள்படும் ஒரு சாதாரன பெயர்ச் சொல். இந்தச் சூழலில், இது பழைய ஏற்பாட்டின் பல புள்ளிகளில் தோன்றுகிறது. 11 உதாரணமாக, சாமுவேல் புத்தகத்தில், தாவீது பெலிஸ்தரின் சாத்தானாக (விரோதி) வழங்கப்படுகிறார், எண்கள் புத்தகத்தில், இந்த சொல் ஒரு வினைச் சொல்லாக தோன்றுகிறது, யெகோவா ஒரு தேவதையை சாத்தானுக்கு அனுப்பிய போது (எதிர்க்க) பிலேயாம்.12 புதிய ஏற்பாட்டின் அமைப்புக்கு முன்னர், யெகோவாவுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த ஒரு தேவதூதரின் பெயர் சாத்தான் என்ற எண்ணம் யூத சமுகங்களுக்குள் வளர்ந்தது, மேலும் அவரைப் பின்பற்றுபவர்களுடன் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்; இந்த கணக்கு ஏனோக்கின் புத்தகம் போன்ற சமகால நூல்களில் இணைக்கப்படும்.13 இந்தச் சாத்தான் புதிய ஏற்பாட்டின் சில பகுதிகளில் இடம் பெற்றது, அங்கு மனிதர்களை பாவம் செய்ய தூண்டிய ஒரு நபராக அவர் முன்வைக்கப்பட்டார்; மத்தேயு புத்தகத்திலும் லூக்கா புத்தகத்திலும், நசரேத்தின் இயேசுவை வனாந்தரத்தில் உண்ணா விரதம் இருந்ததால் அவரை சோதிக்க முயன்றார்.*

*14"சாத்தானியம்" என்ற சொல் பிரெஞ்சு சாத்தானியத்திலிருந்து ஆங்கிலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 15 "சாத்தானியம்" மற்றும் "சாத்தானியவாதி" என்ற சொற்கள் முதன் முதலில் பதினாறாம் நூற்றாண்டில் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் தோன்றியதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன, அவை கிறிஸ்தவ குழுக்களால் மற்ற, போட்டி கிறிஸ்தவ குழுக்களைத் தாக்க பயன்படுத்தப்பட்டன. 16 1565 ஆம் ஆண்டு ஒரு மேலும் இக்கருத்து குறித்த விளக்கங்கள் தேவைப்படும் இடங்களில் விள்ளக்க வேண்டியுள்ளதால் இங்கு தவிர்த்துக் கொள்ளப்படுகிறது. மத்தியக் கிழக்கு தெற்கு மற்றும் தென்கிழக்குநாடுகளில் உள்ள இச்சாத்தனியப் பண்பாடு தமிழ்புத்த நிலப் பண்பாட்டில் மிக வலுவாக உள்ளது. தமிழின் சங்க இலக்கியம், அறவிலக்கியம், ஐம்பெரும் ஐஞ்சிறுங்காப்பியங்களிலும், இவ்விலக்கியங்களின் சமகால கல்வெட்டு செப்பேடுகளிலும், தமிழ் இலக்கணங்களான தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல் உரைகளிலும் வணிகர்கள் சாத்தன் எனக் கூறப்பட்டுள்ளன.*

*இவற்றை ஒருங்கிணைத்து விளக்குவதன்வழி தமிழ்நிலப்பரப்பிற்கும் சாத்தமரபிற்கும் உள்ள நெருங்கிய உறவை புரிந்துகொள்ளுவதோடு தண்டமிழாசான் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனின் ஆழ்ந்த அகன்ற உலக அறிவின் தொடர்பையும் புரிந்துகொள்ளமுடியும். இதன்வழி மணிமேகலைக் காப்பியம் அனைத்துலக பார்வையைப் பின்புலமாக கொண்டுள்ளது என்பதையும் விளங்கிக் கொள்ளமுடியும். இதனால் சங்க இலக்கியத்தில் உள்ள சாத்தன் மரபு குறித்துச் சுருக்கமாக சுட்டுவது பயன்தரக்கூடும்.*

**தமிழ்சங்க இலக்கியமும் சாத்தனியமும்**

*கடலிலிருந்தும் மலையிலிருந்தும் கிடைத்தப் பொருட்பொதிகளை சுமப்பதற்கேதுவான உடல்வாகுடைய கழுதைகளை வணிகர்கள் ஓட்டிக்கொண்டு செல்லுவதை "கழுதைச்சாத்து" என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.*

***புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்***
***தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்க - 80***

***முல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்***
***வில்லுடை வைப்பின் வியன்காட் டியவி***

*இது போன்ற குறிப்புகளிலிருந்து வணிகர்கள் பழந்தமிழில் சாத்துக்கள் எனப் பட்டனர். இதிலிருந்தே சாத்தன், சாத்தி என்கிற பெயர்கள் உண்டானது எனக் கருதுவோருளர். இது விலையைச் சாற்றுதல் (கூறுதல்) என்பதிலிருந்து வந்தது எனவும் உரைக்கின்றனர். ஆனால் சாஸ்தா என்பதிலிருந்து சாத்தன் என்கிற பெயர் தோன்றியது என மயிலை சீனி வேங்கடசாமி சுட்டுகிறார்.*

*இது குறித்து மேலும் அவர் கூறுவதாவது, சாத்தன், அல்லது "சாத்தனார்" என்னும் பெயர் "சாஸ்தர்" என்னும் வடமொழிப் பெயரின் திரிபு. "சாஸ்தர்" என்பது புத்தருக்குரிய பெயர்களுள் ஒன்று என்பது "அமரகோசம்", "நாமலிங்கானு சாசனம்" முதலிய வடமொழி நிகண்டுகளால் அறியப்படும். எனவே, "சாஸ்தர்" என்னும் சொல்லின் திரிபாகிய "சாத்தன்" என்னும் பெயர் புத்தரைக் குறிக்கும் பெயராகப் பண்டைக் காலத்தில் வழங்கப்பட்டு வந்தது. இந்தப் பெயரைப் பௌத்த மதத்தினர் பெரும்பான்மையும் தத்தம் சிறுவருக்குச் சூட்டினர். பண்டைக் காலத்தில், அதாவது கடைச் சங்க காலத்தில், தமிழ் நாட்டிலிருந்த பௌத்தர்கள் "சாத்தன்" என்னும் பெயரைப் பெரும்பாலும் மேற் கொண்டிருந்தனர் என்பது சங்க நூல்களினின்றும் தெரிய வருகின்றது. பௌத்த நூலாகிய "மணிமேகலை"யை இயற்றியவர் பௌத்த மதத்தினர் என்பதும், அவரது பெயர் "சாத்தனார்" என்பதும் ஈண்டுக் கருதத்தக்கது. கோவலன் என்னும் "சிலப்பதிகார"க் கதைத் தலைவனுடைய தந்தை "மாசாத்துவன்" என்னும் பௌத்தன் என்பதும், கோவலன் கொலையுண்டபின், மாசாத்துவன் பௌத்த பிக்ஷுவாகித் துறவு பூண்டான் என்பதும் ஈண்டு நோக்கற்பாலனசு என்கிறார்.*

*தர்மசாஸ்தா என்ற பெயரும் புத்தரைக் குறித்து நிற்கிறது கேரளாவில் உள்ள அய்யப்பனுக்குத் தர்மசாஸ்தா என்று பெயர், இது பவுத்த திருப்பதிகளுள் ஒன்று எனவும் அவர் விளக்குகிறார். புத்தர் 96 சாஸ்திரங்களையும் கற்றவர். ஆகையால் சாஸ்திரன் எனப் பெயர் பெற்றார். இது தமிழில் மாசாத்தன் எனப்படுகிறது. புறநானூறு 395 ஆம் பாடலில் அறப்பெயர் சாத்தன் என்று குறிக்கப்படுகிறது. இது தர்மசாஸ்தா அல்லது தம் மசாத்தா என்பவற்றிற்கான நேரடி தமிழாக்கமாகும்.*

*பிடவூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தனிடம் நக்கீரர், தன்னை அறப்பெயர் சாத்தனின் உறவோன் எனச் சொல்லிக் கொள்கிறார்.*

***"அறப்பெயர் சாத்தன்கிளையேம், பெரும்" புறம். 395***

*என்று அவர் சொன்னவுடன் பெருஞ்சாத்தன் தன் வீட்டிற்குப் புலவரைக் கூட்டிச் சென்று தன் மனைவியிடம் என்னை உபசரிப்பது போலவே இவரையும் உபசரி என்கிறார். பெருஞ்சாத்தன் இப்பாடலில் "ஐ" எனச் சுட்டப்படுகிறான். ஐயென்பதற்குத் தலைமை என்ற பொருளுண்டு. பெரியோரை அய்யர் என்றும், தெய்வத்தை அய்யனார் அல்லது அய்யப்பன் என்றும் வழங்குவது தமிழ் மரபாகும்.*

*நக்கீரர் சுட்டும் பிடவூரில் அய்யனார் கோயில் இன்றும் காணப்படுகிறது. அந்த அய்யனார் பவுத்த அய்யனராகலாம். அய்யனார் கையில் ஓலைச் சுவடி காணப்படுகிறது.*

*இது சாஸ்திரங்களைக் கற்றவன் என்பதன் குறியீடாகும். இப்பிடவூர்தித் தன் ஆண்ட உறந்தைக்குக் கிழக்கில் உள்ளது. இன்றும் திருச்சிக்குக் கிழக்கில் 5 மைல் கல் தொலைவில் இவ்வூரும்அய்யனார்கோயிலும்இருக்கிறது.*

*இதனை ஆசீவகத்தோடு மட்டும் தொடர்புப்படுத்தி விளக்குகிறார் நெடுஞ்செழியன். கவுதமபுத்தரின் வருகை வரை ஆசீவக சமயத்தார் உட்பட அனைவரும் மவுன சாமியார்களாக மட்டும் இருந்தனர். பொது மக்களுடனான உரையாடலில் அவர்கள் பங்கெடுக்கவில்லை. மட்டுமல்லாமல் ஆசீவகர் விதிக்கோட்பாட்டில் நம்பிக்கை உடையவர்கள். இதனால் அவர்கள் சமூக மாற்றம் குறித்து சிந்திக்கவில்லை. புத்தம் தமது தம்மத்தை சாதி, சமயம், நிலம், மொழி, பண்பாடு உள்ளிட்ட அனைத்து வடிவங்களுடனும் திறந்தவெளியில் எடுத்துரைத்து உரையாடியது. பூரணர், மர்க்கலி கோஸாலர், பகுதகாச்சாயனார், அஜிதகம்பலர், சஞ்சை பெலட்ட புத்தர் உள்ளிட்ட ஆசீவக முன்னோடிகளுடன் புத்தர்கள் உரையாடியது குறித்து இலலித்தவிஸ்தாரம் என்னும் புத்தநூல்வழிதான் அறியமுடிகிறது. தவிரவும் புத்தர்கள் கருத்துவேறுபாடுடையவருடனும் இணக்கமாக உடன்பாட்டுநிலையில் நேர்நிலையாக பேசி தங்களுடைய கொள்கையை அவ்வமைப்பின் போக்கிலேயே கலந்து ஏற்கச் செய்வர். இந்த அனுகுமுறையை நாம் மணிமேகலைக் காப்பியத்திலும் காணலாம். இத்தகைய அணுகுமுறையால் புத்தம் பெருநெறியாக வளர்ந்து நிறுவனத் தன்மையை அடைந்தது. இத்தன்மை ஆசீவகத்திற்கு இருக்கவில்லை. மேற்சொன்ன காரணத்தால் புத்தம் அனைத்து வட்டார குழுக்களின் பழக்கவழக்கங்களுடனும் உறவைப் பேணியது.*

*இந்த அடிப்படையில் சாத்தன், சாத்தி என்பவை புத்த சமயத்தவரின் பெயர்களாகும். பெருஞ் சாத்தன், பேரி சாத்தன், பெருந்தலைச் சாத்தன், கூலவாணிகன் சாத்தன், மாஅத்தன், சாத்தி, மாசாத்தி எனப் பெயர் கொண்ட பல புலவர்கள் உள்ளனர். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நான்கு தொகை நூல்களில் இவ்வகைப் பெயர்களில் 35 புலவர்கள் காணப்படுகின்றனர். இவர்களால் மொத்தம் 84 பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அகத்திணை பாடல்கள் 62. 62 பாடல்களில் குறிஞ்சி 17, முல்லை 10, மருதம் 5, நெய்தல் 13 பாலை 17, பாலைத் திணைப் பாடல்களில் நற்றிணை 4, குறுந்தொகை 2, அகநானூறு 11 என்பனவாகும். பழந்தமிழகத்தில் சாத்தன் மரபு மிகவலுவாக இருப்பதனை சங்க இலக்கியத்தை வாசித்து அறியமுடிவது போல இவ்விலக்கியத்தின் சமகால கல்வெட்டுகளை கொண்டும் இதனை தெளிவுப்படுத்தமுடிகிறது.*

**சங்ககால கல்வெட்டுகளில் சாத்தனியம்**

*மதுரை மாவட்டம் அழகர்மலை, திருப்பரங்குன்றம், அரிட்டாப்பட்டி, மீனாட்சிபுரம், இராமநாதபுர மாவட்டம் குன்னக்குடி கரூர் மாவட்டம் புகலூர் ஈரோடு மாவட்டம் அரிச்சலூர் திருக்கோவிலூர் வட்டம் ஜெம்பை உள்ளிட்ட பல இடங்களில் சங்ககால கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் பிராமி எழுத்துகளால் ஆனதால் இவற்றை பிராமி கல்வெட்டுகள் என்றும், இவ்வெழுத்து இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் பெருவேந்தன் அசோகனால் அறிமுகம் செய்யப்பட்டதனால் அசோக பிராமி என்றும், தென்னிந்தியாவில் திராவிட மொழிகளுக்கேற்ப எழுத்துவடிவம் மாற்றத்தோடு காணப்படுவதனால் திராவிடி என்றும், தமிழகத்தில் பாலி, சூரசேனி மொழிகளை அப்படியே பிராமியில் எழுதாமல் தமிழை பிராமிவடிவில் எழுதப்பட்டிருப்பதனால் தமிழிக் கல்வெட்டுகள் என்று*

*கல்வெட்டாய்வாளர்களால் சங்ககால கல்வெட்டுகள் குறிக்கப்படுகிறது. இக்கல்வெட்டுகள் அனைத்தும் புத்தசமண ஆசிரியர்களுக்கு மலைக்குன்றுகளில் இருக்க இடம் ஒதுக்கி கற்படுக்கைகள் அமைத்துத் தந்ததை உரைக்கின்றன. பெரும்பாலும் வணிகர்களாலும் சில அரசர்களாலும் இவ்வுதவி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வணிகர்களின் பெயர்கள் பெரும்பாலும் சாத்தன் எனக்குறிக்கப்பட்டுள்ளமை குறிக்கப்படுகிறது.*

*சங்ககாலகல்வெட்டுகளுள்அரச்சலூர்கல்வெட்டுகுறிப்பிடத்தக்கது. மணிக்கல்வணிகன் (இரத்தினக்கல்) ஒருவருடைய பெயரை சாத்தன் எனச்சுட்டுகிறது. இச்சாத்தன் கணக்கு எனச் சொல்லப்படுகிற எழுத்தறிவு மிக்கவனாகவும் இருப்பதை இக்கல்வெட்டுக் காட்டுகிறது. அதனால் நமது புரிதலுக்காக தேவைக்கருதி இக்கல்வெட்டு சொல்லும் செய்திகள் சுருக்கமாக தரப்படுகிறது.*

*மாறநாட்டு நாணயப் பரிசோதகனாகிய தேவன் சாத்தன் தூய்மை பெறுவதற்குத்தவம் செய்ய (இந்தப் படுக்கைகளைக்) கொடுத்தான் என்பது எழுத்தும் புணருத்தான் மணிய்வணக்கன் தேவன் சாத்தன்.*

*எழுதுதும் என்றிருப்பது எழுத்தும் என்றிருக்க வேண்டும். புணருத்தான் என்பது பொருத்தினான், சேர்த்தான் என்னும் பொருள் உள்ள சொல். இது புணர்த்தான் என்றிருக்க வேண்டும். எழுத்தும் புணர்த்தான் என்பதன் பொருள். எழுத்தையும் சேர்த்தவன்*

*மணிவண்ணக்கன் என்றால் மணிக்கல் (இரத்தினக்கல்) வாணிகன் என்பது பொருள். தேவன் சாத்தன் - இது மணிவாணிகனுடைய பெயர். வண்ணக்கன் என்பது பொன்னையும் மணிகளையும் பரிசோதிக்கிறவன். புதுக்கயத்து வண்ணக்கன் சம்பூர் கிழான், வடம வண்ணக்கன் தாமோதரன், வண்ணக்கன் சோமருங்குமரனார் என்னும் பெயர்களைச் சங்கச் செய்யுட்களில் காண்கிறோம்.*

*மணிக்கல் வாணிகனாகிய தேவன் சாத்தன் (இந்தக் கல்வெட்டின்) எழுத்துக்களையும் எழுதினான் என்பது பொருள். எழுத்தும் என்பதில் உள்ள "உம்" இவன் இன்னும் எதையோ செய்தான் என்று கூறுகிறது. அது என்ன? குகையில் முனிவர் இருப்பதற்குக் கற்படுக்கையை அமைத்ததோடு அல்லாமல் அவனே இந்தக் கல்வெட்டின் எழுத்துக்களையும் எழுதினான் என்பது பொருள்.*

**அடிக் குறிப்புகள்**

1. *சுதேசமித்திரன் 1961 சூன் 4 ஆம்நாள் ஞாயிற்றுக் கிழமைவெளியீடு, "ஈரோடு அருகே பிராமி எழுத்துச் சாசனம் என்னும் தலைப்பு" "ஈரோடுக்குப் பக்கத்தில் அரச்சலூர் மலையில் மே 26 ஆம் நாள் பிராமி எழுத்துச் சாசனம் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அரச்சலூர் மலையிலே ஆண்டிப் பாறை என்னும் குகையிலே இந்தச் சாசனம் எழுதப்பட்டிருக்கிறது. மயிலை சீனிவேங்கடசாமியும் அவருடைய நண்பர்களான ஸ்ரீபால், வித்துவான்கள் இராசு, பச்சையப்பன், சென்னியப்பனும் இந்தச் சாசனத்தைத் தற்செயலாகக் கண்டு பிடித்தார்கள்.*
2. Annual Report on Indian Epigraphy *1961-62 க. 10*

3. க. 67. Seminar on Inscriptions 1966.
4. Early South Indian Palaeography, க. 293-298.

*மேலும் குன்றக் குடிவட்டாரத்தில் உள்ள ஞானியார் மடத்தில் இருக்கும் ஒரு கல்வெட்டுக் குறித்து மயிலைசீனி.வேங்கடசாமி கூறும் விளக்கங்களை சிறிதுகாண்போம்.*

*இராமநாதபுர வட்டத்து, திருப்பத்தூர் தாலுக்காவில் குன்னக்குடி (குன்றக்குடி) இருக்கிறது. காரைக்குடியிலிருந்து ஐந்துக் கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள குன்றின் பெயரே இவ்வூரின் பெயராக அமைந்திருக்கின்றது. குன்றின் மேல் முருகப் பெருமானுக்குக் கோயில் இருக்கின்றது. குன்றின் அடிவாரத்தில் மூன்று குடை வரை (குகைக்) கோயில்கள் இருக்கின்றன. மலை மேல் உள்ள முருகன் கோயிலுக்கு மேற்கே இயற்கையாக அமைந்த பொடவு இருக்கிறது. இந்தப் பொடவு இப்போது ஞானியார் மடம் என்று பெயர் கூறப்படுகிறது. இந்தப் பொடவின் மேற் புறப்பாதையின் உட்பக்கத்தில் நம்முடைய ஆராய்ச்சிக்குரிய பிராமி எழுத்துக் கல்வெட்டு இருக்கின்றது. 1909 ஆம் ஆண்டில் இந்த எழுத்து கண்டு பிடிக்கப்பட்டது. 1910 ஆம் ஆண்டு கல்வெட்டுத் துறை அறிக்கையில் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த எழுத்து 1909 ஆம்ஆண்டு கல்வெட்டுத் தொகுப்பின் 44 ஆம் எண்ணாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*குகைவாயிலின் மேற்புறத்துப் பாறையில், உட்புறமாகப் பொறிக்கப்பட்டுள்ள இந்த எழுத்துக்கள் ஒரே வரியில் பதினொரு எழுத்துக்களைக் கொண்டிருக்கிறது. இந்த எழுத்துக்களைப் பொறித்த கற்றச்சன் தவறு செய்து விட்டான். வழக்கப்படி இடப் புறத்திலிருந்து வலப்புறமாக எழுதாமல், வலப் பக்கத்திலிருந்து இடப் பக்கமாகப் பொறித் திருக்கின்றான். இந்த நிலையில் இவ்வெழுத்துக்களைப் படிப்பது கடினமாக இருக்கின்றது. இந்த எழுத்துக்களின் வரி வடிவம் இது.*

*இதை இடப் புறத்திலிருந்து தொடங்கி வலப் புறமாக எழுதினால் இதன் உருவம் இப்படி அமையும். படிப்பதே சரியாகும். உப்பூர் ஆதன்சாத்தன் குன்றக்குடி மலைப் பொடவில் கற்படுக்கைகளைத் தன்னுடைய செலவில் அமைத்தான் என்பது இதன் பொருள்.*

**அடிக் குறிப்புகள்**

1. Madras Epigraphy Report, 1910 pt. II para 5.
2. Epi.Call.44 of 1909.
3. Journal of Madras University Vol. XXX No. 1, (page. 5&7) p. 285&287 Early South Indian palaeography 1967.
4. p. 67.Seminar on Inscriptions 1966.

*இங்கு திரட்டியளிக்கப்பட்டுள்ள தரவுகளிலிருந்து பெறக்கூடியக்கருத்துகளாவது, எழுத்தறிவு எண்ணறிவு தத்துவப்புலமை இலக்கியம் உள்ளிட்டக்கலைமரபுடனும் வணிகம் கல்வி மருத்துவம் உள்ளிட்டபண்பாட்டு நாகரிகமரபுடனும் தமிழில் சாத்தமரபு ஆழமான உறவைக்கொண்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.*

*இவ்வுயர்பெருமரபில் வந்தவர் மணிமேகலைக்காப்பியத்தின் ஆசிரியர் தண்டமிழாசான் மதுரைகூலவாணிகன் சீத்தலைச்சாத்தனாராவார்.*

*மணிமேகலைக்காப்பியத்தின் சிறப்புகளை இக்காப்பியத்தில் ஊடாடும் உயர்பன்னெறி மரபுகளை புரிந்துகொள்ளவும் தண்டமிழாசான் குறித்து சுருக்கமாகவேனும் விளக்குவது தேவையாகிறது.*

*மதுரை கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் தமிழில் காப்பியமரபை தொடங்கி வைத்தவர். ஆசை, காமம், கோபம், அதிகாரவெறி போன்ற மனித பலகீனங்களால் ஊடாடிக்கொண்டிருந்த அனைத்துலகக்ங காப்பிய மரபுக்கெதிராக மனிதனின் ஆகச் சிறந்தபலம் உயர் ஞான நெறியே விடுதலைக்கு வழி என்பதைக் கண்டறிந்து காப்பியம் செய்ததன் வழிகலகம் செய்தவர். சங்கத் தொகைப்பாக்களான எட்டுத் தொகையிலும் இவ்வாசிரியரின் 10. பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளது. புறநான்னூற்றில் ஒருப் பாடலும் 59 அகநானூற்றில் ஐந்துப்பாக்களும் 53, 134, 306, 320 நற்றிணையில் மூன்று பாக்களும். 36, 127, 339 குறுந்தொகையில் ஒருப்பாடலும் என இவருடைய பாக்கள் சங்க இலக்கியத்தில் உள்ளது. திருவள்ளுவ மாலையிலும் இவருடைய பாடல் ஒன்று உள்ளது. சங்க இலக்கியத்தின் திணைமரபையும் அதன் தொடர்களையும் தனது மணிமேகலைக் காப்பியத்தில் சூழலுக்கேற்ப மாற்றியும் போற்றியும் கையாளுகிறார்.*

## References


1. *Annual Report on Indian Epigraphy, P.10, 1961-62.*
2. *Annual Report on Indian Epigraphy, P.10, 1961-62.*
3. *Early South Indian Palaeography, P. 293-298.*
4. *Madras Epigraphy Report, 1910.*
5. *Journal of Madras University Vol. XXX No. 1, Early South Indian palaeography, p. 285-287, 1967.*